**சென்னை-5, வேளாண்மை இயக்குநர் அலுவலக துணை இயக்குநர் (நிர்வாகம்-2) (பொ) அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்:- திரு.வீ. நாகராஜன்.,**

**செ.மு.ஆணை எண். அபபி3/112740/2023** **நாள்.21.03.2025**

பொருள் பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தொகுதி IV – இளநிலை உதவியாளர் தெரிவு செய்தது (தேர்வு நாள். 24.07.2022) – வேளாண்மைத் துறைக்கு தெரிவாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது – இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர்களாக பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண். 1919/PSD- D2/2023, நாள்.02.09.2023.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அநிபி5/ 92705/2023, நாள்.08.12.2023.
3. இவ்வலுவலக முறைசாராக் குறிப்பு எண். அநிபி5/92705/2023, நாள்.04.03.2024.

--------

**ஆணைகள்:**

பார்வை 1 இல் காணும் தேர்வாணைய கடிதத்தின்படி தொகுதி IV இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட தெரிவாளர்கள் வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2 இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி அவர்களுக்கு பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது. அதில் கீழ்க்காணும் பணியாளர்கள் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்துள்ளனர்.

2) எனவே, கீழ்க்கண்ட பணியாளர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 28 (1)-இன்படி இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும், தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் விதி 32(a)(i) இன் படி பணிவரன்முறை செய்த நாள் முதல் மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் ஈராண்டுகள் தகுதிக்காண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

| தெரிவு பட்டியல் வ.எண் | இளநிலை உதவியாளர் பெயர் (திருவாளர்கள்) மற்றும் பிரிவு | TNPSC Reg No. | பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 13 | எஸ்.சரண், உரம் | 0401072119 | 18.12.2023 முற்பகல் |
| 42 | E. சுரேஷ், வாகமு | 2802006153 | 18.12.2023 முற்பகல் |
| 95 | ஜெ.திவ்யா, மகப்பேறு விடுப்பு | 0901032292 | 15.12.2023 முற்பகல் |
| 105 | எம்.மணிசங்கர், பஒந-II | 0110005111 | 28.12.2023 முற்பகல் |

3) இவர்களில் வரிசை எண். 13, எஸ். சரண் (பதிவு எண். 0401072119) அவர்களது தமிழ்வழிக்கல்வி உண்மைதன்மை முதன்மை கல்வி அலுவலர் / முதன்மை கல்வி அலுவலகம் / தருமபுரி மாவட்டம் அவர்களது கடித எண். 1864/அ1/2024, நாள்.03.03.2025 இன்படி உறுதி செய்யப்பட்டது.

4) தனியர்களது இந்த பணிவரன்முறையானது மாண்பமை உச்சநீதிமன்றத்திலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்திலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்விலும் இது தொடர்பாக நிலுவையில் இருந்து வரும் நீதிமன்ற வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது.

5) இவர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் விதி 34 பின்னிணைப்பு V வ.எண். 8 இன் படி ஈராண்டுகள் தகுதிக்காண் பருவம் நிறைவு செய்ய வேண்டிய மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும்.

6) தனியர்கள் உரிய நாளில் ஊதிய உயர்வு மற்றும் அதற்கான நிலுவைகள் பெற தகுதியுடையவர்கள். இவர்களுக்கான இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் தகுதிக்காண் பருவம் முடித்த பின்பு வழங்கப்பட வேண்டும்.

ஒம்/-வீ. நாகராஜன்,
துணை இயக்குநர் (நிர்வாகம்-2) (பொ)
வேளாண்மை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-5.

பெறுநர்
மேற்கண்ட இளநிலை உதவியாளர்கள்,
இவ்வலுவலகம்

நகல். 'அநிபி' பிரிவு இவ்வலுவலகம்
நகல். 'பணம்' பிரிவு தனியர்களது பணிப்பதிவேட்டில் உரிய பதிவகள் மேற்கொள்ள கேட்டு நகலிடப்படுகிறது.
நகல். 'சப' பிரிவு இவ்வலுவலகம்
நகல். பணிவரன்முறை பதிவேடு
நகல். அபபி3/இருப்புக் கோப்பு/2025

//ஆணைப்படி//

கண்காணிப்பாளர்

24/3/25 24.3.2025